01.11.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆறடி உயரத்தில் குலை தள்ளிய அதிசய வாழை



ஆந்திரத்தில் ஒரு வாழை மரம் ஆறடி உயரத்தில் குலையை தள்ளியது. ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டம், மலிக்கி புரத்தைச் சேர்ந்த சுப்ரமணியேஸ்வர ராஜு தனது வணிக வளாகத்துக்கு முன் அமைத்துள்ள தோட்டத்தில் விதவிதமான செடி, கொடி, மரங்களை வளர்த்து வருகிறார்.

இங்குள்ள வாழை மரம், தற்போது 6 அடி நீள குலையை தள்ளி உள்ளது. இதை, அப்பகுதி மக்கள் ஆச்சர்யத்துடன் பார்வையிட்டனர்.

**விவசாயிக்கு மானியத்தில் விசை உழுவை இயந்திரம்**



அம்பாசமுத்திரத்தில் விவசாயிக்கு மானிய திட்டத்தில் விசை உழுவை இயந்திரம் வழங்கப்பட்டது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் அம்பாசமுத்திரம் வேளாண் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வைராவிகுளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி த. லட்சுமணனுக்கு உழு விசை இயந்திரத்தை வேளாண் இணை இயக்குநர் (மாநில திட்டம்) நா. செல்வராஜ் வழங்கினார்.

வட்டார வேளாண் உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன், வேளாண் அலுவலர்கள் அனந்தகுமார், கற்பகராஜ்குமார், லட்சுமி, உதவி வேளாண் அலுவலர் காசிராஜன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

வேளாண்மையில் இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்கும் வகையில் 50 சதவீதம் மானியத் திட்டத்தில் சிறு- குறு விவசாயிகள், மகளிர் விவசாயிகள், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ரூ. 75 ஆயிரமும், பிற விவசாயிகளுக்கு ரூ. 60 ஆயிரமும் மானியத்துடன் விசை உழுவைகள் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க 77 விவசாயிகளுக்கு ரூ. 48 லட்சம் மானியம்**



பெரம்பலூர் மாவட்ட ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் மூலம் 77 விவசாயிகளுக்கு வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க ரூ. 48,12,500 மானியம் வழங்கப்பட்டுள்ளது என்றார். தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ராஜாமணி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாவட்டக்தில் சுமார் 7500 ஹெக்டேரில் சின்ன வெங்காயம் சாகுபடிசெய்யப்பட்டு வருகிறது. அறுவடை செய்யப்படும் வெங்காயத்தை, பெரும்பாலான விவசாயிகள் பாரம்பரிய முறையில் வெங்காயத்தை சேமித்து வருகிறார்கள்.

இந்த முறையில் வெங்காயத்தை சேமிக்கும்போது. எடை குறைகல், முளைக்கல் மற்றும் அழுகுதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளும் ஏற்படுகிறது. இவற்றை களைய, அறிவியல் பூர்வமான முறையில் குறைந்த செலவில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க ரூ. 1.75 லட்சம் திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம் மானியமாக ரூ. 87,500 தோட்டக்கலைத் துறை மூலம் வழங்கப்படுகிறது. அதன்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் 2015- 16 ஆம் ஆண்டில் 55 வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க 77 விவசாயிகளுக்கு ரூ. 48,12,500 வழங்கப்பட்டு, வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### மாதுளை மாதம்

அமெரிக்காவில் நவம்பரில் மாதுளை மாதமாகக் கொண்டாடுகின்றனர். செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை உலகின் பெரும்பாலான பகுதிகளில் மாதுளை அறுவடை நடைபெறுகிறது. மாதுளையில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என 3 வகைகள் உள்ளன. மாதுளையின் பூர்வீகம் ஈரான். மாதுளை உற்பத்தியில் தற்போது முதலிடத்தில் மகாராஷ்டிராவும், அதற்கு அடுத்த இடத்தில் கர்நாடகாவும் உள்ளன.

மாதுளம்பழம் பூரண ஆரோக்கியத்தை தரும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று கூறிய நம் முன்னோர்கள் மாதுளம் பழத்தில் லெட்சுமிதேவி உறைவதாக கூறினர். மாதுளையின் சிறப்பை உணர்ந்து அதன் விதைகளை தமிழர்கள் மாதுளம் முத்துக்கள் என கூறினர்.

### உருளைகிழங்கு விவசாயத்தில் லாபம் பெறுவது எப்படி?

மஞ்சூர் :உருளைகிழங்கு விவசாயத்தில் அதிக விளைச்சல் பெற்று லாபம் பெறுவது குறித்து, விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை வழங்கியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தப்படியாக மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிலும் உருளை கிழங்கு பல ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, இதன் விளைச்சல் குறைந்து வருகிறது. இந்நிலையில், உருளை கிழங்கு விளைச்சலை அதிகரித்து லாபம் பெற, வேளாண்துறை வெளியிட்டுள்ள அறிக்கை விபரம்:

சாகுபடி முறைகள்:உருளை கிழங்கு பயிரிடும் இடத்தில் மண் கெட்டியாக இல்லாமல், நன்கு நீர் வடிய கூடிய நிலையில் இருக்க வேண்டும்; மண்ணின் கார அமிலத் தன்மை, 4.8 முதல் 5.4 ஆக இருப்பது ஒரு குளிர்கால பயிராகும். பொதுவாக உருளை கிழங்கு மானாவாரி பயிராக சாகுபடி செய்யப்படுகிறது.

பருவம், பயிரிடும் முறை:மலைப்பகுதிகளில் கோடைக்காலப் பயிராக, மார்ச் முதல் ஏப்ரல் வரையும், இலையுதிர்கால பயிராக ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையும், பாசனப்பயிராக ஜனவரி முதல் பிப்ரவரி வரை பயிரிடலாம். 40 முதல் 50 கிராம் எடையுடைய நன்கு முதிர்ச்சி அடைந்த நோயற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும். பயிரிட்ட, 10 நாட்களுக்கு பிறகு பாசனம் செய்ய வேண்டும்.

தொடர்ந்து வாரத்திற்கு ஒரு முறை பாசனம் செய்ய வேண்டும். பயிரிட்ட, 60 நாட்களுக்கு பிறகு தேவையான அளவு உரம் இட வேண்டும். முதல் களை எடுப்பு, 45 நாளில் செய்ய வேண்டும், இரண்டாவது களை எடுப்பு மற்றும் மண் அணைத்தல் பயிரிட்ட, 60 நாட்களில் செய்ய வேண்டும். களைக்கொல்லிகள் இல்லாமல் களைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

நோயற்ற விதைகளை பயன்படுத்தணும்:

நோயற்ற விதைகளை தேர்ந்தெடுப்பதுடன், விவசாய நிலத்தில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். நச்சுயிரி தாக்காத கிழங்குகளை பயிரிட தயாராக இருப்பது நல்லது. நோய் தாக்கிய செடிகளை அகற்றி, அழிக்க வேண்டும். நோய் பரப்பும் காரணிகளை கண்டறிந்து அழிக்க வேண்டும்.

பயிரிட்ட அதே விவசாய நிலத்தில் கிழங்கை பயிரிடக்கூடாது. காய்கறி பயிர்களை சுழற்சி முறையில் மேற்கொள்ள வேண்டும். வழிமுறைகளை விவசாயிகள் சரியான முறையில் கையாளும் பட்சத்தில் 120 நாட்களில் நல்ல மகசூல் பெறுவதுடன், அதிக லாபம் பெற முடியும். இவ்வாறு வேளாண்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கூடலூரில் மழை:வயல்களில் ஈரம்**

கூடலூர் : கூடலூர், தேவா லா பகுதியில், நள்ளிரவில் பெய்த மழையை தொடர்ந்து, வறண்ட வயல்கள் ஈர தன்மைக்கு மாறி உள்ளன.கூடலூர், தேவாலா, முதுமலை புலிகள் காப்பகம் பகுதிகளில், நடப்பாண்டில் பருவமழை ஏமாற்றி விட்டது. பருவமழையை நம்பி, பயிரிட்ட நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி வாடும் நிலைக்கு மாறியுள்ளன. மசினகுடி வனப்பகுதியில், கோடைக்கு முன்னதாக

வறட்சி ஏற்பட துவங்கியுள்ளது. இதனால், மக்கள் மட்டுமின்றி வன விலங்குகளும் குடிநீருக்கு சிரமப்படும் சூழல் ஏற்பட துவங்கியது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, முதல், கூடலுார், தேவாலா மற்றும் முதுமலையில் சில பகுதிகளில் விடிய, விடிய இடி மின்னலுடன் மழை பெய்தது. இதனால், வெப்பம் தணிந்து, குளிர்ச்சியான கால நிலை ஏற்பட்டது. திடீர் மழையினால், வயல்களில் ஈர தன்மை ஏற்பட துவங்கியதால், கவலையிலிருந்து விவசாயிகள், சற்று நிம்மதி அடைந்துள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம்

திருக்கோவிலுார்: திருக்கோவிலுாரில், வரும் 4ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நடக்கிறது.

திருக்கோவிலுார் கோட்டத்திற்கு உட்பட்ட விவசாயிகளின் குறைகள் தீர்ப்பதற்கான கூட்டம், வரும் 4ம் தேதி நடக்கிறது. சந்தப்பேட்டையில் உள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடக்கவுள்ள கூட்டத்திற்கு, ஆ.ர்.டி.ஓ., செந்தாமரை தலைமை தாங்குகிறார்.

காலை 11:00 மணிக்கு நடைபெறும், கூட்டத்தில், திருக்கோவிலுார், உளுந்துார்பேட்டை, கண்டாச்சிபுரம் ஆகிய தாலுகா பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு, குறைகளை தெரிவித்து நிவர்த்தி பெற லாம். இதில் அனைத்துத் துறை அலுவலர்கள் பங் கேற்கின்றனர் இவ்வாறு, ஆர்.டி.ஓ., அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரே நாள் மழையில் தத்தளித்த நகரம்: பருவமழையை எதிர்கொள்வது எப்படி?

கரூர்: கரூரில் நேற்று காலை முதல் மதியம் வரை பெய்த மழை காரணமாக பல்வேறு முக்கியமான இடங்களில் மக்கள் நடமாட முடியாமலும், டூவீலரிலும் செல்ல முடியாமலும் தத்தளித்தனர்.

கரூர் மாவட்டம் முழுவதும் கடந்த, மூன்று நாட்களாக காலை முதல் மாலை வரை மேக மூட்டமாகவே காட்சியளித்தது. ஆனால், நேற்று காலை, 9:00 மணி முதல், 10:00 மணி வரை இடியுடன் கூடிய மழை பெய்தது. கரூர் நகராட்சி பகுதியில் முக்கிய பகுதியான மனோகரா கார்னர், லைட் ஹவுஸ் கார்னர், காமராஜ் மார்க்கெட், சி.எஸ்.ஐ., சர்ச் கார்னர், மாவட்ட அரசு மருத்துவமனை, கோவை சாலை பகுதிகளில், தண்ணீர் தேங்கி நின்றது. வேலைக்குச் செல்பவர்களும், டூவலர், வேன், பஸ் ஓட்டிகளும் பெரிதும் அவதிப்பட்டனர். நடந்து செல்வோர் என்ன செய்வது என்று தெரியாமல் ஆங்காங்கே தண்ணீர் வடியும் வரை நின்றிருந்தனர். திண்ணப்பா தியேட்டர் கார்னர் முதல் தலைமை அரசு மருத்துவமனை வரை சாக்கடை பணிகள் நடந்து நடை பாதை பணிகளும் நடந்துள்ளது. ஆனால், இப்பகுதியில் ஆங்காங்கே குளம் போல் ஒரு நாள் மழைக்கே தண்ணீர் தேங்கி நின்றதால் மக்கள் அவதிப்பட்டனர். ஒரு நாள் பெய்த மழைக்கே கரூர் நகரம் முழுவதும், குளம் போல் தண்ணீர் தேங்கியிருந்த நிலையில் பொதுமக்கள் தத்தளித்ததால், அனைவரும் விரக்தியில் உள்ளனர்.

## வெண்டைக்காய் விலை உயர்வு: வேளாண் பல்கலை அறிவிப்பு

கரூர்: வரும் காலங்களில் வெண்டைக்காய் விலை உயர வாய்ப்புள்ளதாக, கோவை வேளாண் பல்கலை விலை முன்னறிவிப்பு திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில், திண்டுக்கல், கோவை, சேலம், வேலூர், காஞ்சிபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் வெண்டைக்காய் சாகுபடி அதிகளவில் நடக்கிறது. நடப்பாண்டு குறைவான மழையால், வெண்டைக்காய் வரத்து குறைந்து உள்ளது. வரும் காலங்களில் வெண்டைக்காய் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து, வேளாண் பல்கலை வெளியிட்ட அறிக்கை: கடந்த, 2014 - 15ல், 0.08 புள்ளி பரப்பளவில் வெண்டைக்காய் சாகுபடி செய்யப்பட்டு, 0.56 லட்சம் டன் அறுவடை செய்யப்பட்டது. நடப்பாண்டு மழை குறைவு காரணமாக, வரத்து குறைய வாய்ப்புண்டு. வரும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் வெண்டைக்காய் பண்ணை விலை, கிலோ, 18 ரூபாய் முதல், 20 ரூபாய் வரை உயர்ந்து இருக்கும்.

இதை அடிப்படையாக வைத்து, விவசாயிகள் நடவு, அறுவடை முடிவுகளை எடுக்கலாம். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வாய்ப்புண், பித்தத்தை போக்கும் மருத்துவ முறைகள்



எளிதில் கிடைக்க கூடிய மூலிகைகள், சமையலறையில் வைத்திருக்கும் உணவுப் பொருட்களை கொண்டு பாதுகாப்பான மருத்துவத்தை நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் பார்த்து வருகிறோம். அகத்தியை பயன்படுத்தி வாய்ப்புண், பித்தத்தை சரிசெய்யும் மருத்துவத்தை பார்க்கலாம். அகத்தி பல்வேறு நோய்களை போக்கும் தன்மை கொண்டது. இதை பத்திய மருந்தாக பயன்படுத்த வேண்டும். அதிகமாக பயன்படுத்தினால் வயிற்றுப்போக்கு ஏற்படும். சொரி, சிரங்குகளை அதிகப்படுத்தும். மாதம் மூன்று முறை எடுத்துக்கொள்வது அவசியம். வயதானவர்களுக்கு எலும்பு தேய்மானத்தால் ஏற்படும் மூட்டுவலிக்கு மருந்தாகிறது.

மூக்கடைப்பை போக்க கூடியது. அகத்தியில் கால்சியம் சத்து அதிகமாக உள்ளது.

வயிற்று பூச்சிகளை வெளித்தள்ளும் தன்மை கொண்டது. வயிற்றில் உள்ள கிருமிகளை அழிக்கும். அகத்தியின் பூ, மரப்பட்டை, இலை, வேர்பட்டை ஆகியவை மருந்தாகிறது. அகத்தி பூக்களை பயன்படுத்தி பித்தத்தை சமன்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: அகத்தி பூ, தனியா, பனங்கற்கண்டு. ஒரு பாத்திரத்தில் ஒரு ஸ்பூன் தனியா எடுத்து லேசாக வறுக்கவும். 2 அகத்தி பூவுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். இதில், நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். வடிகட்டி குடித்துவர காபி, டீ அதிகம் பருகுவதால் ஏற்படும் பித்தத்தை போக்குகிறது.

அகத்தி பூக்கள் அற்புதமான மருத்துவ குணத்தை கொண்டது. அதிக சுவை உடையது. அகத்தி பூவை பஜ்ஜி போன்று செய்து சாப்பிடுவதால் எலும்பு பலம் பெறும். மூளைக்கு நல்ல தெளிவு கிடைக்கும். அகத்தி இலையை நீர்க்கோவையை போக்கும் மருந்து தயாரிக்கலாம். அகத்தி கீரை சாறு ஒரு பங்கு எடுக்கவும். இதனுடன் 5 பங்கு தேன் சேர்த்து கலந்து உச்சந்தலையில் சிறிது தேய்தால் நீர்கோவை சரியாகும். மூக்கடைப்பு குணமாகும். தலையில் சேர்ந்திருக்கும் நீரை வெளியேற்றும். பெரியவர்களுக்கு ஓரிரு சொட்டு மூக்கில் விடுவதால் தலையில் நீரேற்றம் குணமாகிறது. தலைவலி இல்லாமல் போகிறது. உணவாக பயன்படும் அகத்தி உன்னத மருந்தாகிறது.

அகத்தி கீரையை பயன்படுத்தி வாய்ப்புண், கைகால் எரிச்சல், கண் எரிச்சல், உடல் சூடு பிரச்னைக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய், அகத்தி கீரை சாறு ஆகியவற்றை சம அளவு எடுத்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இதை வடிகட்டி எடுத்து மேல் பூச்சாக போடும்போது உள்ளங்கை, கால்களில் ஏற்படும் எரிச்சல் சரியாகும். பித்தத்தினால் ஏற்படும் உடல் சூடு தணியும். இதை சாப்பிடுவதால் நெஞ்செரிச்சல் சரியாகும். தலைக்கு தேய்த்து குளிப்பதால் உடல் சூடு தணிவதுடன் கண் எரிச்சல் இருக்காது. அகத்தி மலச்சிக்கலை போக்க கூடியது.

எலும்பை பலப்படுத்தும் உணவாக விளங்குகிறது. எலும்பில் ஏற்படும் பலவீனத்தை போக்குகிறது. விஷயத்தை முறிக்கும் தன்மை கொண்டது. நார்ச்சத்து உடையது. புற்றுநோய் வராமல் தடுக்கிறது. பல்வேறு நன்மைகளை கொண்ட இந்த அகத்தியை சமைக்கும்போது சிறிது பூண்டு, வெல்லம் சேர்த்து சமைத்தால்

இதனுடைய கசப்பு சுவை மறைந்து போகும். அகத்தியை மாதம் இருமுறையாவது சேர்த்துக் கொண்டால் பல்வேறு நோய்கள் குணமாகும். தொண்டை சதை பகுதியில் ஏற்படும் அழற்சிக்கான மருந்து தயாரிக்கலாம். அதிமதுரத்தை தேனீராக்கி குடித்தால் தொண்டையில் ஏற்படும் அழற்சி சரியாகும்.

## விவசாயிகளுக்கு ☐50 லட்சத்தில் வேளாண் கருவிகள் வழங்கல்

நாமக்கல்: நாமக்கல்லில் விவசாயிகளுக்கு ☐50 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளை கலெக்டர் வழங்கினார். நாமக்கல் மாவட்டத்தில் 15 வட்டாரங்களில், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது. இதில் முதற்கட்டமாக 201516ம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் 9 வட்டாரங்களில் இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலும் புதிய விவசாய குழுக்கள் அமைத்தோ அல்லது ஏற்கனவே செயல்பட்டு வரும் விவசாய குழுக்களுக்கோ அல்லது வட்டார விவசாயிகள் சங்கம், நீர் பயன்படுத்துவோர் சங்கம், சுய உதவிக்குழு, கிராமப்புற வேலையற்றோர் இளைஞர்கள் குழு, நபார்டு குழு, பண்ணை மகளிர் முன்னேற்ற குழு போன்ற குழுக்களுக்கோ அல்லது தொழில் முனைவோருக்கோ ☐25 லட்சம் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள் வாங்க அனுமதி வழங்கப்படுகிறது.

இதில் ☐10 லட்சம் அரசாங்க மானியமாகவும், ☐15 லட்சம் இக்குழுக்களின் பங்கீட்டுத் தொகையாகவும் செலுத்தப்படுகிறது. இந்த நிதியாண்டில் (201617) நாமக்கல், கொல்லிமலை, மல்லசமுத்திரம், எலச்சிபாளையம், பள்ளிபாளையம், பரமத்தி ஆகிய 6 வட்டாரங்களிலும், வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்கம் திட்டத்தின் கீழ் 4 வட்டாரங்களிலும் வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைக்க ஆணை பெறப்பட்டுள்ளது.

இத்திட்டங்களில் மோகனூர் மற்றும் எலச்சிபாளையம் வட்டாரங்களில் தலா ஒரு வாடகை மையம் அமைக்க ☐50 லட்சம் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை ☐20 லட்சம் மானியத்தில் விவசாய தொழில் முனைவோர்களுக்கு கலெக்டர் ஆசியாமரியம் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது, வேளாண்மை பொறியியல் துறையின் செயற்பொறியாளர் பிரேம்குமார்,

உதவி செயற்பொறியாளர்கள் ஜெகதீசன், குப்புசாமி, உதவிபொறியாளர்கள் மற்றும் இளநிலைபொறியாளர்கள் உடனிருந்தனர்.

## வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் மீன் வளர்ப்பு செயல் விளக்க பயிற்சி

தர்மபுரி: பென்னாகரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் விவசாயிகளுக்கு கூட்டின மீன் வளர்ப்பு செயல் விளக்கப்பயிற்சி அளிக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் கூட்டின மீன் வளர்ப்பு செயல் விளக்கப்பயிற்சி பென்னாகரத்தில் நடந்தது. தர்மபுரி மாவட்ட மீன்வளத்துறை ஆய்வாளர் ஜனார்த்தனன் மீன் குஞ்சு இருப்பு செய்தல், கலவை தீவனம் வழங்குதல், மீன் அறுவடை செய்தல் பற்றி விரிவாக விளக்கம் அளித்தார். பயிற்சியில் உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, சார் ஆய்வாளர் அசினாபானு, மீன் வள உதவியாளர் சங்கர் மற்றொரு சங்கர் மற்றும் 30 விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் செய்திருந்தார்.